IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.
O.S.No. 176 /2012
Deposition of witness for PW2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | அன்பரசன் (VAO வன்றந்தாங்கல் கிராமம்) | Caste | : | - |
| Father's Name | : | அன்னியப்பன் | Calling | : | - |
| Village | : | சத்துவாச்சாரி, வேலூர் | Religion | : | இந்து |
| Taluk | : | - | Age | : | 43 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the 30 day of January , 2019.

Chief Examination

எனக்கு நீதிமன்றததிலிருந்து அழைப்பாணை வந்ததின் பேரில் நான் தற்பொழுது சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் 2 மாத காலமாக வன்றந்தாங்கல் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு நீதிமன்றத்திலிருந்து வந்த அழைப்பாணையில் 1940 வருடம் முதல் 2012 வருடம் வரையிலான அ பதிவேடு அசல் ஆவணங்கள் மற்றும் சான்றிட்ட நகல்கள், சர்வே எண் 64/1-க்குரிய பட்டா மற்றும் சிட்டா பதிவேடுகள் ஆகியவற்றை எடுத்துவரும்படி அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், 1986 வருட முதலான இன்றைய தேதி வரையிலான பட்டா, சிட்டா மற்றும் அ பதிவேடுகள் மட்டுமே எனது அலுவலகத்தில் உள்ளதால் அதை மட்டும் எடுத்து வந்துள்ளேன். 1986-ம் வருட அ பதிவேட்டில் சர்வே எண். 64/1, எலிசபெத் அம்மாள் என்பவர் பெயரில் உள்ளது அது பட்டா 51 ஆக உள்ளது. மேற்படி அ பதிவேட்டில் எந்த வருடம் வரை மேற்படி சர்வே எண் 64/1 எலிசபெத் அம்மாள் பெயரில் இருக்கிறது என்றால் பட்டா மாற்றம் செய்யும் வரை அவர் பெயரில் இருந்தது பட்டா மாற்றம் செய்யும் போது சிட்டா பதிவேட்டில் மட்டுமே மாற்றங்கள் செய்யப்படும் அ பதிவேட்டில் மாற்றம் செய்யப்படாது. இன்றைய தேதி வரை அ பதிவேட்டில் மாற்றங்கள் எதுவும் இல்லை. அ பதிவேட்டில் இன்றைய தேதி வரையில் வேறு ஒரு நபருக்கு மாற்றம் செய்ததது குறித்து என்னிம் ஆவணங்கள் இல்லையா என்றால் நான்

கொண்டுவந்த பதிவேட்டில் அவ்வாறு மாற்றம் எதுவும் இல்லை. தற்பொழுது கணினியில் மாற்றம் செய்திருக்கலாம். கணினிமயம் எப்பொழுதிலிருந்து மாற்றப்பட்டது என்றால் 2014 முதல் ஆக்கப்பட்டது. எலிசபெத் அம்மாள் பெயரில் எந்த வருடம் வரை பட்டா, சிட்டா பதிவேடு உள்ளது என்றால் 1986 முதல் 2014 வரை உள்ள பட்டா, சிட்டா பதிவேட்டின் படி எலிசபெத் அம்மாள் பெயரில் 1986 ம் வருடம் சர்வே எண். 64/1 உள்ளது. பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது . பட்டா மாற்றம் செய்த வருடம், மாதம் இந்த பதிவேட்டில் சரியாக இல்லை. பட்டா, சிட்டா மாற்றப்பட்டதிற்கான செயல்முறைகள் என்னிடம் உள்ளதா என்றால் என்னிடம் இல்லை. பதிவேட்டின் படி விடிஆர் 155ஏ என்று உள்ளது வருடம் சரியாக தெரியவில்லை. பட்டா மாற்றம் செய்யவேண்டும் எனில் முறையாக அறிவிப்பு அனுப்பி முறைப்படி வட்டாட்சியரோ அல்லது கிராம நிர்வாக அலுவலரோ விசாரணை செய்தே பிறகு மாற்றம் செய்யவேண்டும் என்றும் அதுபோல் ஜோஜப்பகவுண்டர் என்பவர் பெயருக்கு மேற்படி சர்வே எண் பெயர் மாற்றம் செய்யப்பட்டதிற்கான செயல்முறை என்னிடம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. எந்த ஆண்டு பட்டா மாற்றம் செய்யப்பட்டது என்று என்னால் சொல்ல இயலாது. அதே சிட்டா பதிவேட்டில் விடிஆர் எண் 155ஏ/பசலி 1440 என குறிப்பிடப்பட்டுள்ளது அதை வைத்தது பார்த்தால் அனுமானத்தின் அடிப்படையில் 1991-ம் வருடம் பட்டா மாற்றம் செய்திருக்கலாம். பட்டா எண். 55-ஐ பட்டா எண் 882-க்கு புனித அன்னம்மாள் மடத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது அது எதன் அடிப்படையில் என்று அங்கு குறிப்பிடவில்லை. ஒரு பட்டா மாற்றம் செய்யப்படவேண்டும் எனில் செயல்முறைகள் போடப்படவேண்டும் எனில் சரிதான். சர்வே எண். 64/1 1991 வருடம் அன்னம்மாள் மடத்தின் பெயரில் மாற்றப்படுவதற்கு முன்னர் கோ எலிசபெத் அம்மாள் பெயரில் உள்ளது. 2014-க்கு பிறகு கணினி மயம் ஆக்கப்பட்டதற்கு பிறகு என்னிடம் பதிவேடுகள் எதுவும் இல்லை. சர்வே எண் 64/1 அ பதிவேடு Ex.X1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சர்வே எண்ணில் சர்வே எண் 64/1-ன் பட்டா, சிட்டா பதிவேட்டின் உண்மை நகல் Ex.X2

ஆக குறியீடு செய்யப்படுகிறது. சர்வே எண் 64/1-க்கான வரைபடம் Ex.X3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சர்வே எண்., 64/1-க்கான பசலி வருடம் 1428-க்கான் அடங்கல் கணக்கு Ex.X4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சிட்டா பதிவேட்டில் எலிசபெத் அம்மாள் பெயர் எவ்வாறு உள்ளது என்றால் ஜோசப் கவுண்டர் மனைவி எலிசபெத் அம்மாள் என்று உள்ளது. மேற்படி Ex.X2-ன் படி ஜோசப் கவுண்டர் மனைவி எலிசபெத் அம்மாள் என்ற ஒரே பெயர் இடமம் பெற்றுள்ளது என்றால் சரிதான். அதை சுழித்து தான் விடிஆர் 155ஏ என்று பட்டா 882-க்கு போக்கு என்று குறிப்பிட்டு அம்மாள் மடத்திற்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

(Sd/-)..V.Vannamalar
DISTRICT MUNSIF
KATPAD I.